குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 90-2023

அ.சா. 5

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. V.பிரபாகரன்<br>(SSI of police – Berigai PS) |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.வேலாயுதாச்சாரி |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 52 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 11.05.2026**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது பேரிகை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். பேரிகை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 112/2019 வழக்கு CC.No. 90/2023 ஆக நிலுவையில் இருந்து வரும் விவரம் எனக்கு தெரியும் இவ்வழக்கில் நான்

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.05.2019ம் தேதி ஒசூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த கிருஷ்ணப்பா மகன் பாலாஜி என்பவரை பேரிகை காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் முருகேசன் என்பவர் விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து ஒப்படைத்ததை பெற்றுக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் ராமநரசிம்மன் என்பவர் 14.05.2019ம் தேதி நிலைய குற்ற எண் 112/2019 இ.த.ச. பிரிவுகள் 341, 324 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கின் கோப்பை புலன் விசாரனைக்கு எடுத்துக்கொண்டு 14.05.2019ம் தேதி பகல் 12.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ரமேஷ் மற்றும் கோபாலாச்சாரி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் பார்வைிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார். **அந்த மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் பாலாஜி, வெங்கடேஷ், திம்மராஜ், முனியப்பா, தேவராஜ், தனஞ்செயன், ஸ்ரீபதி மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் தங்களாகவே நீதிமன்றத்தில் ஆஜராகி பிணை மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, எதிரிகள் கைது செய்யப்படவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட புகார்தாரர் பாலாஜிக்கு சிகிச்சை அளித்த அருண்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்ற **அந்த காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த

காயச்சான்றில் புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் கருத்துரை வழங்கியதால் வழக்கின் சட்டபிரிவை 341, 324, 326 இதச வின் கீழ் மாற்றம் செய்து சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார். **அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் வாக்குமூலம் பதிவு செய்த SSI முருகேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணையை முடித்து இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சிகளை எப்போது எங்கு வைத்து விசாரிக்கப்பட்டது என்று ஆவணங்களின் அடிப்படையில் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மருத்துரையை புலன் விசாரணை அதிகாரியால் எப்போது விசாரித்தார் என்று சொல்ல முடியுமா என்றால் 23.11.2019ம் தேதி விசாரித்துள்ளார். வழக்கு சம்பவம் 14.05.2019ம் தேதி குடிசாதனப்பள்ளி கிராமம் மட்டன் வெங்கடேசன் வீட்டின் பின்புறத்தில் சம்பவம் நடைப்பெற்றது. சம்பவம் நடைப்பெற்ற பிறகு புகார் மனு பெறுவதற்கு முன்பு காவல் நிலையத்திற்கு எதாவது தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்கு சென்று விசாரித்தார்களா என்றால் இல்லை. புகார்தாரர் தனியார் மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றதாக குறிபிடப்பட்டுள்ள நிலையில் அந்த தனியார் மருத்துவமனையின் மருத்துவரை புலன் விசாரணை அதிகாரி விசாரித்துள்ளாரா என்றால் இல்லை. புகார்

வாக்குமூலத்தில் 12.05.2019ம் தேதி மாலை 11.00 மணிக்கு சம்பவம் நடைப்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவர் வழங்கிய காயச்சான்றில் 14.05.2019ம் தேதி இரவு 11.00 மணிக்கு புகார்தாரர் காயமுற்றதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் வேறு ஏதுவோ சம்பவத்தால் காயமுற்று அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி முறையான புலன் விசாரணை மேற்கொண்டு இருந்தால் வழக்கு விசாரணையை கைவிட்டு இருப்பார் என்றால் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**